# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று நாமக்கல், பெரம்பலூரில் உரையாற்றுகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஐந்தாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 13-ஆம் தேதி திருவள்ளூரில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று நாமக்கல், பெரம்பலூரில் உரையாற்றுகிறார்.



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

**16.04.2026 (வியாழக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| மாலை 5 மணி | **நாமக்கல்** - பொம்மு குட்டைமேடு (பொதுக்கூட்டம்) | நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம், குமாரபாளையம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு |
| மாலை 7 மணி | **பெரம்பலூர்** - ஒதியம் பிரிவு, குன்னம் (பொதுக்கூட்டம்) | பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் |

குறிப்பு: ❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18



கோவை ராஜவீதி, தேர்நிலைத் திடலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர், மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் உரையாற்றினார். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சைதையில் மா.சுப்பிரமணியன் வாக்குச் சேகரிப்பு!

சென்னை, ஏப்.16–

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப் பிரமணியன் நேற்று முன்தினம் (14–4–2026) காலை 7.00 மணிக்கு தொடங்கி இரவு 9.00 மணி வரை 169 (அ) வட்டத்தில் பொன்னியம்மன் கோயில் தெரு, நாயுடு தெரு, வரதாபுரம், கலைஞர் 1 முதல் 3 தெருக்கள், திருவள் ளுவர் 1 முதல் 3 தெருக்கள், யாதவாள் தெரு. மன்னப்ப தெரு, பொன்னியம் மன் கோயில் தெரு, துலுக்கா னத்தம் மன் கோயில் தெரு, ஏரிக்கரை சாலை, பொன்னியம்மன் கோயில் தெரு வழி யாக புது தெருவில் 12.30 மணி வரையும் உணவு இடைவேளைக்குப் பிறகு மாலை 4 மணிக்கு சூர்யா நகரில் தொடங்கி ரஞ் சித் சாலை, மருது அவென்யூ தண்ட பாணி தெரு, அருணாசலம் தெரு, வள்ளி யம்மாள் தெரு, கோட்டூர் கார்டன் / வது பிரதான சாலை, கிரஸண்ட் சாலை, 2வது லூப் தெரு, கோட்டூர் கார்டன் 4வது தெரு, ரிவர்வீவ் சாலை, இ.டபிள்யு. எஸ். குவாட டஸ், வெள்ளையன் தெரு, தண்டபாணி தெரு, கோட்டூர்புரம் சித்ரா நகர், வாட்டர் டேங் காலனி முழுவதும் இரவு 9.00 மணி வரை வாக்குச் சேகரித்தார்.



கும்பகோணம் சட்டமன்ற தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் வெற்றி வேட்பாளர், தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ வை ஆதரித்து திருநாகேஸ்வரம் பேரூர் பகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு தலைமை உறுப்பினர் ஜி.இராமகிருஷ்ணன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஏற்காடு சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் கழக வேட்பாளர் ரேவதி மாதேஸ்வரனை ஆதரித்து கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி., அயோத்தியா பட்டணம் தெற்கு ஒன்றியத்தியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் கழக அரசின் சாதனைகளை சொல்லி பொதுமக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அப்போது தே. மலையரசன் எம்.பி., ஒன்றிய செயலாளர் ஏ. விஜயகுமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலு , முனைவர் அ.சீனிவாசன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.